# பெரியபாளையம் அருகே தொழிற்சாலையில் அமோனியா வாயு கசிவு!

## 9 பேர் பலி: 35 க்கும் மேற்பட்டோர் கவலைக்கிடம்!





திருவள்ளூர், ஜூன் 24-

திருவள்ளூர் மாவட்டம் பெரிய பாளையம் அருகே உள்ள கன்னி கைப்பேர் கிராமத்தில் செயின்ட் பீட்டர் பால் என்ற பெயரில் இறால் மற்றும் கடல் உணவு பொருட்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தனியார் நிறுவனம் செயல்பட்டு வந்தது.

இந்த நிறுவனத்தை சென்னையை சேர்ந்த ஜோசப் ஜெகன்,மோகன் ஆகிய இருவரும் நடத்தி வந்தனர்.டேனியல் என்பவர் மேலாளராக பணியாற்றி வருகிறார். தொழிற்சாலையில் தினமும் 2 ஷிப்ட் மூலம் 200 க்கும் மேற்பட்ட வட மாநில தொழிலாளர்கள் இங்கு தங்கி பணியாற்றினர். இதில் பெரும்பாலானோர் பெண்கள் ஆவர்.சுமார் 120 பேர் பணியில் இருந்த போது ‘தொழிற்சாலையில் இருந்து திடீரென அமோனியா வாயு கசிவு ஏற்பட்டது.

இதனை சுவாசித்த பணியில் இருந்த தொழிலாளர்கள் மயங்கி விழுந்தனர். அவர்களது வாய், மூக்கு. காதுகளில் இருந்து ரத்தம் வழிந்தது. அவர்களை உடனடியாக மீட்டு மஞ்சங்கரணையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரி மற்றும் செங்குன்றம், சுங்கச்சாவடி அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு சென்று அனுமதித்தனர்.

மொத்தம் 72 பேருக்கு மயக்கம் ஏற்பட்டு இருந்தது. உடல் நலம் மிகவும் மோசம் அடைந்தவர்கள் மேல் சிகிச்சைக்காக சென்னை ‘ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரி, ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பி வைக்கப் பட்டனர்.

இதில் மஞ்சங்கரனையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஜூமானி ஜூவாங் (19). மாலோத்தி (20) ஆகிய 2 பேரும் இறந்தனர். மேலும் சிகிச்சை பெற்று வந்த ஒடிசா மாநிலத்தை சேர்ந்த சபினி (22) என்பவர் பலியானார்.

இதேபோல் சென்னை ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்த ஓடிசா மாநிலத்தை சேர்ந்த கீதா ஜூவாங்கா(24) மற்றும் ராஜீவ் காந்தி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்த ஒருவர் என மொத்தம் 9 பேர் அடுத்தடுத்து உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இதனால் அமோனியா வாயு கசிந்த விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 9 அதிகரித்து உள்ளது.

மேலும் 35 பேர்களின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. அவர்களுக்கு வென்டிலேட்டர் உதவியுடன் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் மொத்தம் 67 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

அவர்களது உடல் நிலையை டாக்டர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். சிகிச்சை பெற்று வரும் அனைத்து தொழிலாளர்களும் வடமாநிலத்தை சேர்ந்தவர்கள். அவர்களது விபரங்களை அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர். பலியாளவர்களின் உடல்களை அவர்களது சொந்த ஊருக்கு அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

வாயு கசிவு ஏற்பட்ட நிறுவனத்தில் தங்கி பணியாற்றிய மேலும் 140 தொழிலாளர்களை அதிகாரிகள் மீட்டு பெரியபாளையத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்து உள்ளனர்.

---

### எஸ்.ஆர்.எம்.யூ. தலைவர்

## சி.ஏ.ராஜா ஸ்ரீதர் மனைவி திருமதி சாந்தி மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 24-

எஸ்.ஆர்.எம்.யூ. தலைவர் சி.ஏ. ராஜா ஸ்ரீதரின் மனைவி திருமதி. சாந்தி அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

SRMU தலைவர் சி.ஏ. ராஜா ஸ்ரீதர் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி சாந்தி அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

உயிருக்கு உயிரான உற்ற துணையை இழந்து தவிக்கும் திரு. ராஜா ஸ்ரீதர் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை!

## விராலிமலை த.சந்திரசேகரன் தாயார் த.பிச்சையம்மாள் படத்திறப்பு!

### முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைக்கிறார்! சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லப்பாண்டியன் - அன்னியூர் சிவா - க.வைரமணி பங்கேற்பு!



*புதுக்கோட்டை, ஜூன் 24 -*

*விராலிமலை சி.தனக்கோடியாபிள்ளை அவர்களின் மனைவியும் முசிறி த.பாலசுப்பிரமணியன், கழக விவசாயத் தொழிலாளர் அணித் துணைத் தலைவர் த.சந்திரசேகரன் மற்றும் நினைவில் வாழும் த. ரெங்கராஜ் ஆகியோரின் தாயார் த.பிச்சையம்மாள் படத்தை இன்று (24.6.2026 -புதன்கிழமை) காலை 11.00 மணியளவில் டி.என்.பி திருமண மஹால், (பைபாஸ் சாலை) விராலி மலையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர், எஸ்.ரகுபதி தலைமையில் தி.மு.க. கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு திறந்து வைத்து இரங்கல் உரை நிகழ்த்துகிறார்.*

*நிகழ்ச்சிக்கு முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், திருச்சி மத்திய மாவட்ட திமுக செயலாளர் க.வைரமணி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர், கழக விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், அ.இளங்குமரன், மு. பி.ம.சத்தியசீலன், கே.பி. அய்யப்பன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, எம்.கோவிந்தராஜ், ஓ.எஸ். வெங்கடாச்சலம், வை. விஜயக்குமார், எம்.எஸ்.ஏ. ரியாஸ் முகம்மது ஆகியோர். நிகழ்ச்சியில் மாநில, மாநகர, மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக செய லாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொள்கின்றனர்.*

---

### மாநகர காவல் ஆணையர்கள் உள்பட

## 14 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிடமாற்றம்!

சென்னை, ஜூன் 24 –

மாநகர காவல் ஆணையர்கள் உள்பட 14 ஐபிஎஸ் அதிகாரிகள் பணி யிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் 14 ஐபிஎஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பான உத்தரவை தமிழக உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் கே. மணிவாசன் பிறப்பித்துள்ளார்.

மதுரை காவல் ஆணையராக எஸ். ராஜேந்திரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சென்னை வடக்கு மண்டல கூடுதல் ஆணையராக கபில் குமார் சாரக்கர் நியமிக்கப் பட்டுள்ளார். திருப்பூர் மாநகர காவல் ஆணையராக எஸ்.ராஜேஸ்வரி நியமனம் செய்யப்பட்டுள்ளார். சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு ஐஜியாக அனில் குமார் கிரி நியமிக்கப் பட்டுள்ளார்.

சென்னை மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையராக தேன்மொழி நியமிக்கப்பட்டுள்ளார். லஞ்ச ஒழிப்புத் துறை சிறப்பு புலனாய்வு பிரிவு ஐஜியாக மகேஸ்வரி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் காவல் துறை தலைமையகத்தின் ஏடிஜிபியாக ஆயுஷ் மணி திவாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## பாயிண்ட் வரட்டும்



‘டீசர்ட் போட்ட
கலைஞராக”
சொற்சிலம்பம்
ஆடிய உதயநிதி..

பதிலுரைக்கு
காத்திருக்கிறது தமிழ்நாடு

பாயிண்ட் வரட்டும்
பாயிண்ட்
வரட்டும் என

மண்டபத்து
குறிப்புக்கும்
மனப்பாடம்
செய்வதற்கும்
காத்திருக்கிறார்
கோட்டு சூட்டு
முதலமைச்சர்...

#என்னநாஞ்
#சொல்றது



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*

---

# மொகஞ்சதாரோவின் புகழ்பெற்ற நடன மங்கையின் சிலையும் என்.சி.இ.ஆர்.டியின் நிலையும்!

மொகஞ்சதாரோ-(அரப்பா) நாகரிகம் சம்பந்தமான புத்தகங்களைப் படித்தவர்களுக்கு அதிலுள்ள நடன மங்கையின் வெண்கலச் சிலையைப் பார்க்காமல் படித்திருக்க முடியாது. அச்சிலை வடிவிலுள்ள நடன மங்கைக்கு சில ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டு இருக்கும். நிற்கிற வடிவமாய் இருக்கும் அச்சிலை ஆடை எதுவுமின்றி இருக்கும்.

புகழ்பெற்ற இந்த வெண்கலச் சிலையானது 9ஆம் வகுப்புக்கான கலைக்கல்வி பாட புத்தகமான மதுரிமாவின் முதல் அத்தியாயத்தில் ‘கலைவரலாறு’ எனும் பகுதியில் இடம் பெற்று இருக்கிறது. சிலை அதன் உண்மை வடிவத்தில் இடம் பெறாமல் மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. அதாவது ஆடை அணிவிக்கப்பட்ட நடன மங்கையாக 9ஆம் வகுப்பு பாடப் புத்தகத்தில் இடம் பெற்று இருக்கிறது.




நன்றி: **இந்து ஆங்கில நாளேடு (16.06.2026)**

**இப்படி நடன மங்கையின் உண்மை வடிவம் மாற்றப்பட்டுள்ளது. இதைத் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் இயக்குநர் தினேஷ் சக்லானி உறுதிப்படுத்தி உள்ளார்.**

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவை National council of Educational Reasearch and Training (NCERT) என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்கள். நடன மங்கையின் உண்மையான வெண்கலச்சிலை ஆடை அணிவிக்கப்பட்டு மாற்றப் பட்டுள்ளது தான் 9 ஆம் வகுப்புப் பாடப் புத்தகத்தில் இடம் பெற்று இருக்கிறது. இதை மொகஞ்சதாரோ உண்மை சிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் புரிந்து கொள்ள முடியும்.

9ஆம் வகுப்புப் பாடப் புத்த கத்தில் மறைக்கப்பட்ட மேனி, 6ஆம் வகுப்புப் பாட புத்தகத்தில் சமூக அறிவியல் பாடத்தில் இடம் பெற்றுள்ள நடன மங்கை சிலை உண்மை வெண்கலச் சிலைக்கு மிக நெருக்கமான வடிவத்தில் உள்ளது. என்.சி.இ.ஆர்.டி.யின் 9, 6ஆம் வகுப்புப் பாட புத்தகங்களில் நடன மங்கையின் மறைக்கப்பட்ட மேனி படமும், உண்மை வெண் கலச் சிலைக்கு நெருக்கமாக உள்ள ஆடையின்றி இருக்கிற படமும் வெளியிடப்பட்டு இருக்கிறது.

கூகுளில் தேடினால் உண்மையான வெண்கலச்சிலையைப் பார்க்கலாம். நாம் கல்விக் குழுவினருக்குச் சொல்ல வருவது **9 ஆம் வகுப்புப் பாட புத்தகத்திலும் 6ஆம் வகுப்புப் பாட புத்தகங்களிலும் இருவேறு வடிவங்களில் ஏன் வெளியிடுகிறீர்கள்? வெளியிட வேண்டும் என்று கருதினால் ஒரே மாதிரியாக அல்லவா வெளியிட்டு இருக்க வேண்டும். ஆடை அணிவித்து வெளியிட வேண்டும் பள்ளிப் பிள்ளைகளுக்கு திறந்த மேனி சிலை வடிவத்தை காட்டக் கூடாது என்று கல்விக் குழு கருதியிருக்கலாம். ஆனால் அது உண்மை வடிவத்திற்கு மாறாக வெண்கலச்சிலை இருப்பதை வெளிப்படுத்தி இருக்கிறது; அப்படி வெளிப்படுத்தினால் அது உண்மை வரலாறாக இருக்க முடியாது. அப்படிப் பாடப் புத்தகத்தில் இருக்கக் கூடாது.**

கல்விக் குழுவினர், 9, 6 ஆம் வகுப்புகளுக்குத் திருத்தப்பட்ட சிலை வடிவங்களை உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வெளியிட வேண்டும் என்று அவசியம் இல்லை. கலைப்பாடம் பற்றிய வரலாற்றை மேல் கல்விப் படிக்கும் போது அம்மாணவர்கள் அங்கே உண்மை வடிவத்தைப் பார்த்துக் கலைப்பாடங்களைப் படித்துக் கொள்வார்கள். என்.சி.இ.ஆர்.டி. கல்விக் குழுவினர் அப்படங்களைப் பாடப்புத்தகத்தில் சேர்த்து ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டாம். வரலாற்று உண்மைக்கு மாறாக ஆடையை நடன மங்கைக்கு அணிவித்தும் இருக்க வேண்டாம்.

**இது குறித்து, கடந்த ஜூன்16 ஆம் தேதி வெளியான ஆங்கில இந்து நாளேடு மொகஞ்சதாரோ நடன மங்கையைப் பற்றி ஒரு கேலிச் சித்திரத்தை வெளியிட்டு இருந்தது. அதனை இந்தக் கட்டுரையினூடே வைத்து இருக்கிறோம். அந்தக் கேலிச் சித்திரத்தில் என்.சி.இ.ஆர்.டி குழுவினர் ஆடை அணிவிக்கப்பட்ட நடன மங்கையை மாணவர்களிடம், காட்டி ‘கடைசி யாக அவர்களை நாங்கள் நாகரிகப்படுத்தி விட்டோம்’ என்று கூறி நக்கல் அடிக்கிறது.**

**என்.சி.இ.ஆர்.டி குழுவினர் வருங் காலத்தில் கவனமாகச் செயல்படக் கேட்டுக் கொள்கிறோம். தங்கள் நிறுவனத்தில் இருக்கும் கல்வியும் ஆராய்ச்சியும் பயிற்சியும் பெயர் பலகையில் இருந்து என்ன இலாபம்? அது செயல்பாட்டில் இருக்க வேண்டாமா?**



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்